Registered No. M. 5068

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ வைகாசிமீ 18உ 31—5—1948 ஹிஜ்ரி 1367 ரஜப்மீ 21உ திங்கட்கிழமை. } இதழ் 19

சென்ற வாரத் தொடர்ச்சி

ஜமீயத் கூட்டத்தில்

மௌலானா மதனியின் அறிவுரை.

பொது பாஷையான உர்தூ அல்லது ஹிந்துஸ்தானி ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்தின் ஞாபகார்த்தமாக விளங்குகிறது.

சுல்தானுல் மஷாயிக் ஹஜ்ரத் நிஜாமுத்தீன் தெஹ்லவி என்னும் பெரியார் அதில் பெரும் பங்கெடுத்துக்கொண்டார். நான்கு ஹிந்துக்கள், ஐந்து முஸ்லிம்களடங்கிய கமிட்டி ஒன்றை அமைத்தார். ஹிந்து முஸ்லிம்களுக்கு பொதுபாஷையை உருவாக்குவதில் அந்தக்கமிட்டி அரும்பாடுபட்டது. கோலாப்பூர் ராஜாராம் காலேஜ் பிரின்ஸிபாலான டாக்டர் பாலகிருஷ்ணனிடமுள்ள பழைய கையெழுத்துப் பிரதிகளிடமிருந்து மேற்கூறிய உண்மை வெளியாகின்றது. 8—8—46-ல் 'கிலாபத்' பத்திரிகையையும் இதை வெளியிட்டிருக்கிறது.

இந்தியாவில் பிரித்தாளும் சூழ்ச்சியை முதல் முதலாக புகுத்தியவர்கள் வெள்ளையர்கள்தான். அந்த சாபக்கேட்டை வளர்ப்பதற்கு மறைந்து போயிருந்த பழைய வடுக்கள் புதுப்பிக்கப்பட்டன. ஹிந்து முஸ்லிம்களிடையே புதிய வேற்றுமைப் பிரச்னைகள் தோற்றுவிக்கப்பட்டன. உண்மை சம்பவங்களைத் திரித்துக்கூறி பொய்யும் புனைசுருட்டையும் புகுத்தி சரித்திரம் திரித்து எழுதியாயிற்று பள்ளிக்கூடங்களில் அதை பாடபுத்தகமாக வைத்து வாலிபர்களின் எண்ணங்களில் வகுப்புவாதம் புகுத்தப்பட்டது.

ஹிந்தி, உர்தூவின் அர்த்தமற்ற வீண் தகராறைக் கிளப்பிவிட்டு பொது நாகரீகத்தை சிதற அடித்தனர். அழிவைத்தரும் இவ்வித வேற்றுமைகள் நிலைக்கவும் ஒற்றுமை முயற்சிகள் பலஹீனமடையவும் வேண்டி தனித்தொகுதி தேர்தல் முறையையும் புகுத்தினார்கள்.

தனித்தொகுதி கோரிக்கை, கோரியவர்கள், அதை ஏற்றுக்கொண்டவர்கள் நடித்த நாடகத்தைப் பார்த்தால் எல்லாம் பிரிட்டிஷ் ஏஜெண்டுகளின் வேலை என்பது விளங்கும் கோரிக்கையை சிருஷ்டித்து விண்ணப்பம் தயாரித்து அதை பிரிட்டிஷ் தாஸர்களிடம் கொடுத்து சிம்லாவுக்கு வைஸ்ராயிடம் தூது கோஷ்டியாக அனுப்பி வைத்தவர்கள் பிரிட்டிஷ் ஏஜெண்டுகளேயாவர்.

கோரிக்கையை ஏற்றுக்கொண்டு முஸ்லீம்கள் மீது உபகாரம் சுமத்தப்பட்டது. தொடர்ந்து செய்யப்பட்ட இம்மாதிரி உபகாரங்களால் ஐக்கியத்தைக் குலைத்து உள்ளங்களில் வெறுப்புத்தீ கொழுந்துவிட்டு எரியும்படிச் செய்தாயிற்று.

அதன் முதல் விளைவு பாகிஸ்தான் கோரிக்கை ரூபத்திலும், இரண்டாவது விளைவு 16, ஆகஸ்ட் 1946-ல் ஆரம்பித்தகலவரங்கள், லட்சக்கணக்கானவர்களின் கொலை, கோடிக்கணக்கானவர்களின் அலங்கோலநிலை ரூபத்திலும் வெளியாகிமுடிவில் மஹாத்மா

காந்தியைப்போன்ற மாபெரும் உத்தமரின் உயிரையும் பலிவாங்கிவிட்டது.

அன்பர்களே! இந்தியாவில் இயற்கைக்கு மாறான தனித்தொகுதி தேர்தல் முறை இருந்த போது வகுப்பு வேற்றுமையைத் தூண்டிவிடக் கூடிய குறுகிய மனப்பான்மையுள்ள வகுப்புவாதிகளுக்குத் தான் தேர்தலில் வெற்றி கிட்டுவதாயிருந்தது. எனவே தேசீய முஸ்லிம் ஸ்தாபனங்களும் தவிர்க்க முடியாத நிலைமையில் வகுப்புவாதத்துறையில் இறங்க வேண்டியதாயிற்று.

15 ஆகஸ்ட், 1947-க்குப்பிறகு இந்திய அரசியல் நிர்ணயசபை தனித்தொகுதி சாபக்கேட்டை இந்தியாவிலிருந்து அகற்றிவிட்டது. இந்நிலையில் தவிர்க்கமுடியாமல் மேற்கொண்டிருந்த பொறுப்பை ஜமீயத்துல் உலமா இயற்கையாகவே விடவேண்டியதாயிற்று. பிப்ரவரி முதல் தேதியன்று ஜமீயத்தின் காரியக்கமிட்டி அதை பிரகடனமும் செய்திருக்கிறது.

இனி ஜமீயத்துல் உலமா மத, கலாச்சார கல்வித் துறைகளில் தன்னுடைய நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்திக்கொள்ளும்.

ஜமீயத்துல் உலமாவின் பொறுப்பு

நம்முடைய பொறுப்புக்கள் குறைந்துவிட்டன என்றும் இனி முஸ்லிம் சமூகத்துக்கு செய்ய வேண்டிய சேவை தீர்ந்துவிட்டதென்றும் நாம் எண்ணி விடக்கூடாது உங்களுடைய முயற்சி தளர்ச்சி அடையுமானல் நீங்கள் ஆண்டவனுக்கும் ஜனங்களுக்கும் பதில் சொல்லியாகவேண்டும். நேரடியாக முஸ்லிம்கள் சம்பந்தபபட்ட பல முக்கிய பிரச்னைகள் நமக்கு முன் இருக்கின்றன.

இஸ்லாமியக்கல்வி முக்கிய பிரச்னையாகும். அரசாங்கம் மதக்கல்வியின் பொறுப்பேற்கத்தயாராயில்லை. நம்முடைய குழந்தைகளுக்கு மதக்கல்வியை எப்படி போதிக்கமுடியும்? ஜமீயத் அங்கத்தினர்கள் அதில் கவனம் செலுத்தி மதக்கல்விக்கு உத்திரவாதமளிக்கக் கூடியதொரு திட்டத்தை தயாரிக்க வேண்டிய தவசியம்.

ஜமீயத்தின் ஒவ்வொரு மெம்பரும் கடமையாகக் கொண்டு மதக்கல்வி போதிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு பெருமளவில் உதவுவதன்மூலம் இப்பிரச்னையில் வெற்றி காணமுடியும்.

ஜமீயத் மெம்பர்கள் தங்களுடைய பிரதேசங்களில் ஆரம்ப பாடசாலைகளை ஏற்படுத்தி தங்கள் கடமையை நிறைவேற்றவேண்டும். தங்களுடைய குழந்தைகளுக்கு கல்வி போதிக்க வேண்டிய கடமையை முஸ்லிம் பொதுமக்கள் உணர்ந்தாலன்றி இதில் வெற்றிகாணமுடியாது.

சிறிய, பெரிய அரபி மதரஸாக்கள் அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். மத்திய கமிட்டி ஒன்றை ஏற்படுத்தி எல்லா மதரஸாக்களும் ஒரே திட்டத்தின் கீழ் நடப்பதால் மதரஸாக்களுக்கு பாதுகாப்பும் முஸ்லிம்களுக்கு அதிக நன்மையும் உண்டாகமுடியும்.

ஷரீயத் சட்டங்கள்

அரசியல் பொருளாதார நலன்களில் ஹிந்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டிருக்கின்றனர்என்பது உண்மையே. வாழ்க்கைத்தரம், உணவு, உடை முதலிய விஷயங்களில் ஹிந்து முஸ்லிம் என்று பார்ப்பது கஷ்டமான காரியம் மேற்கு பஞ்சாப், எல்லைப்புர ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் தோற்றத்தில் பாகுபாடு செய்து காட்டமுடியாது ஸி.பி சென்னை பீஹார்முஸ்லிம்கள் ஹிந்துக்களிடமிருந்து தனித்து காட்சியளிக்கவில்லை.

இவ்வித பொதுவாழ்க்கையிருந்தும் கலாச்சாரத் துறையில் சில குறிப்பிட்ட விஷயங்கள் முஸ்லிம்களுக்கு தனித்திருக்கத்தான் செய்கின்றன. உதாரணமாக விவாகம், விவாக ரத்து போன்ற விஷயங்கள் ஆரம்பத்தில் ஆங்கில ஆட்சியும் முஸ்லிம்களின் கலாச்சார உரிமைகளை ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்திய யூனியனும் அதை ஒப்புக்கொள்ளுமென்று நம்புகிறோம் பம்பாய், கல்கத்தா, ஹரிபுராவில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கூட்டங்களில் இப்பிரச்னை தெளிவாக்கப்பட்டுள்ளது ஜமீயத்துல் உலமா முஸ்லிம்களின் கலாச்சார உரிமைகளைப் பாதுகாக்க கடமைப்பட்டிருக்கிறது. அதற்கான திட்டத்தை தயாரித்து மத்திய, மாகாண சர்க்கார்களுக்கு அனுப்பவேண்டும். அரசியல் பொருளாதார சுதந்திரத்தைப்போல் மத சுதந்திரத்தையும் அனுபவிக்க வசதி இருக்கவேண்டும்.

இந்திய முஸ்லிம்களின் எதிர்காலம்

பிரிவினை நாட்டுக்கு எல்லையற்ற தீமையை விளைவித்திருப்பது உண்மையே. அதைவிட அதிகமாக முஸ்லிம்களுக்குத்தான் தீங்கு விளைவித்திருக்கிறது. நாட்டின் எட்டில் ஒரு பங்கு துண்டிக்கப்பட்டது. ஆனல் முஸ்லிம்கள் பாதிக்குமேல் பிரிந்துவிட்டனர். கௌன்ஸில்கள், சட்டசபைகள், உத்தியோகங்களில் நூற்றுக்கு முப்பத்திமூன்று ஆக இருந்த முஸ்லிம்கள் இன்று நூற்றுக்கு பதிமூன்று அல்லது பதினன்கு

ஆகிவிட்டனர். வியாபாரத்துறையில் முஸ்லிம்களுக்கு இருந்துவந்த அந்தஸ்து போய்விட்டது. இருப்பினும் இந்திய யூனியன் முஸ்லிம்களின் எதிர்காலம் மோசமாக இருக்காதென்று நம்ப இடமிருக்கிறது.

இந்தியாவின் மத அடிப்படையற்ற ஜனநாயக சர்க்கார் அமைக்க இந்திய அரசியல் நிர்ணய சபை தீர்மானித்துவிட்டது. தேர்தல்களில் முஸ்லிம்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பதவிகள் ஒதுக்கப்படும். உத்தியோகஸ்தர்களில் குறிப்பிட்ட அளவு நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன் மேலும் திறமைக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. மத்திய, மாகாண மந்திரி சபைகளில் முஸ்லிம்களும் இருக்கின்றனர். இன்று முஸ்லிம்கள் மந்திரிகளாய் இல்லாமலிருக்கும் மாகாணங்களில் இருந்துவரும் குறை அடுத்த தேர்தல்களுக்குப் பிறகு அகன்று விடுமென்று நம்பலாம்.

இன்று ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பு தற்காலிகமானது. வெள்ளையர்களின் நூற்றைம்பது வருஷப் பிரித்தாளும் சூழ்ச்சியின் பலனாக ஏற்பட்டது. கடந்த பத்து வருஷங்களில் பிற்போக்காளர்களின் ஆத்திரமூட்டும் கிளர்ச்சிகள் அதை இன்னும் அதிகமாக்கிவிட்டன. கூட்டுத் தொகுதி தேர்தல் முறை இந்தப் பிளவைப் போக்கிவிடும் என்பது நிச்சயம்.

இந்த உண்மைகள் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை ஊட்டுவதாய் இருக்கின்றன. இதைவிட மஹத்தானதொரு எதிர்காலத்தை உருவாக்க விரும்பினால் தங்களுடைய போக்கால் தங்கள் முக்கியத்துவத்தை நிரூபித்துக்காட்டவேண்டியது முஸ்லிம்களின் கடமை. எந்த அளவு இந்திய யூனியனுக்கு பிரயோஜனமுள்ளவர்களாய் இருப்பார்களோ அந்த அளவுக்கு கௌரவம் அடையமுடியும். ஜனநாயக நாட்டில் ஜாதி, மதம், குலம், கோத்திரம் முன்னேற்றத்திற்கு காரணமாக இருக்க முடியாது. சேவையும், திறமையுமே முன்னேற்ற வழிகளாகும். சிறந்த சேவையின் தகுதியுள்ளவர்களாக மட்டும் இருந்தால் வெற்றி தானகவே நம்மைத் தேடிக்கொண்டுவரும்.

இந்தியப் பிரிவினை முஸ்லிம் நலன்களையும் பிரித்துவிட்டது. பாகிஸ்தானுக்கு நன்மை அளிக்கக்கூடிய ஒரு விஷயம் இந்திய யூனியனுக்கும் நன்மை அளிக்கக்கூடியதாகவே இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. சில சந்தர்ப்பங்களில் இந்தியா பாகிஸ்தான் நலன்களில் முரண்பாடு ஏற்படலாம். அதைப் போலவே பாகிஸ்தான் முஸ்லிம்களின் நலன் இந்திய முஸ்லிம்களின் அழிவாகவும் இருக்கலாம். நலன்களில் முரண்பாடு ஏற்பட்டிருக்கும் இந்நிலையில் இந்திய யூனியன் முஸ்லிம்களின் நலன்களில் கவனம் செலுத்த வேண்டுமா? அல்லது பாகிஸ்தான் முஸ்லிம்களின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா? என்பதுதான் கேள்வி.

பாகிஸ்தான் முஸ்லிம்களுக்கு நாம் பொறுப்பாளிகளல்ல. நாலரை கோடி இந்திய முஸல்மான்களுக்கு நாம் பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்திய யூனியன் முஸ்லிம்களுக்கு நன்மை பயக்கக்கூடிய போக்கையே நாம் மேற்கொள்ளவேண்டும்.

இந்தியா பாகிஸ்தான் டொமினியன்களிடையே பரஸ்பர நல்லெண்ணமும் நல்லுறவும் இருக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இருப்பினும் இரண்டு டொமினியன்களின் நலனும் நோக்கமும் முரண்படும்போது நாம் மேற்கூறிய கொள்கை அடிப்படையிலேயே முடிவு செய்ய வேண்டும். நம்முடைய அரசியல், மத, கலாசார கடமையும் அதுதான்.

எந்த அளவு இஸ்லாமிய போதனைகளை உணர்ந்து அனுஷ்டிக்க முயற்சிப்போமோ அந்த அளவுக்கு நாம் தாய் நாட்டின் ஊழியர்களாகவும் வீர பாதுகாப்பாளர்களாகவும் முக்கியத்துவம் பெற்றதொரு அங்கமாகவும் இருக்கமுடியும். பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு முஸ்லிம்கள் சக்தியற்ற சிறுபான்மையினர் ஆகிவிட்டனர் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும் சிறுபான்மையினருக்கு பிரகாசமான எதிர்காலம் இல்லையா? முஸ்லிம்களின் ஆட்சி காலத்தில் இதைவிட சிறுபான்மையினராகவே இருந்தனர். 1857 ஜனத்தொகைக் கணக்குப்படி இந்தியாவிலிருந்த முஸ்லிம்கள் நாலு கோடிதான். ஒரு சமூகத்தின் எதிர்காலம் எண்ணிக்கையை பொறுத்ததல்ல. நேர்மை, ஒழுக்கம், திறமையைப் பொறுத்தேயாகும். இன்று இந்தியாவிலிருக்கும் முஸல்மான்களும் அவர்களுடைய கலாச்சார, ஞாபகச்சின்னங்களும் அவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்ததன் விளைவுகளா? அல்லது கத்தி, கட்டாரி நடவடிக்கைகளின் ஞாபகார்த்தமா? இல்லை.

800 வருஷங்களுக்குமேல் இந்தியாவை முஸ்லிம்கள் ஆண்டதற்கு முஸ்லிம்களின் பெரும்பான்மையோ வீராப்போ காரணமல்ல. இஸ்லாமிய போதனைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி மற்றவர்களின் உள்ளங்களில் இடம் பெற்ற நேர்மையான, ஒழுக்கமுள்ள முஸ்லிம்களின் முயற்சிகளே காரணம். அவர்கள் வாள்களைக்கொண்டு மற்றவர்களின் ஜாகிர்களையோ, சொத்துக்களையோ ஆக்ரமிப்பதற்குப் பதில் தங்களுடைய சீரிய ஒழுக்கத்தால் உள்ளங்களை ஆக்ரமித்து

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 | 31—5—'48 திங்கட்கிழமை | இதழ் 19

தாய்நாடு திரும்பும் முஸ்லிம்கள்.

பாகிஸ்தானிலிருந்து முஸ்லிம்கள் பெரிய எண்ணிக்கையில் இந்தியா திரும்பி வருவதைத் தடுக்க உத்தேசித்திருப்பதாக இந்திய சர்க்கார் வெளியிட்டதோர் அறிக்கை கூறுகிறது. ஹிந்து சீக்கிய அகதிகளை குடியேற்றும் வேலை அதனால் தடைபடலாம் என்றும் ஜனநெருக்கம் அதிகரித்திருக்கும் இந்திய நகரங்களில் திரும்பிவரும் முஸ்லிம்களுக்கு இடம் கிடைப்பது சாத்தியமில்லையென்றும் காரணம் காட்டப்படுகிறது. வெளியேறியவர்களின் வாபஸ் விஷயம் ஒரு தரப்பாக இருக்க இந்தியா விரும்பவில்லை. இருதரப்பிலும் வெளியேறியவர்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்புவதைக்குறித்து இந்திய சர்க்கார் பாகிஸ்தான் சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்த தயாராயிருக்கிறது. இந்திய முஸல்மான்கள் தங்கள் தாயகத்துக்கு திரும்பி வந்துகொண்டிருக்கின்றனர். பாகிஸ்தானிலிருந்து வெளியேறிய ஹிந்து, சீக்கியர்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் செல்வது ஒருபுரமிருக்க பாகிஸ்தானில் இருந்துவரும் ஹிந்து, சீக்கியர்கள் நீடித்து இருந்து வருவதற்கேற்ற சூழ்நிலைகூட அங்கு இல்லையென்பது வாஸ்தவந்தான். ஹிந்துக்களுக்கும், குறிப்பாக சீக்கியர்களுக்கும் இடவசதி செய்துகொடுக்க பாகிஸ்தானில் எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை யென்பதை மறுக்க முடியாது. மஹாத்மா காந்தி, பண்டித நேரு, காங்கிரஸ் மஹா சபை இந்திய முஸல்மான்களுக்கு செய்த சேவையை அளவிட்டுச் சொல்வதற்கில்லை. அதற்கு மாறாக பாகிஸ்தானில் ஹிந்து சீக்கியர்களுக்கு சேவை செய்ய ஒருவரும் முன்வரவில்லை. கராச்சியில் ஏற்பட்ட கலவரங்களை மணிக்கணக்கில் அடக்கிவிட்டதாக பாகிஸ்தான் பெருமை பேசலாம். ஆயினும் பொதுமக்களின் மனப்பான்மையை மாற்றி சிறுபான்மையினருக்கு நம்பிக்கை ஊட்ட மஹாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேருவைப் போன்ற தலைவர்களோ, காங்கிரஸைப் போன்றதொரு பொது ஸ்தாபனமோ பாகிஸ்தானில் இருக்கவில்லை. ‘ஹிந்து முஸ்லிம், சீக்கியர் அனைவரும் சகோதரர்களே, நாம் அனைவரும் ஒன்று. பாகிஸ்தான் நம் அனைவருக்கும் சொந்தம்” என்று பாகிஸ்தானில் பேசப்படவில்லை. இரண்டு சமுதாயக் கொள்கை அடிப்படையில் பாகிஸ்தான் வாங்கியவர்கள் அதற்கு நேர்மாறாக எப்படிப் பேசமுடியும்? எத்தனை வாக்குறுதிகள் அளிப்பினும், தேனொழுகப் பேசினும் வகுப்புவாத ஆட்சியின் கீழ் இன்னொரு வகுப்பார் திருப்தியுடன் நிம்மதியாக வாழ முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்தியாவில் மக்கள் மனமாறுதல் அடையவும் சிறுபான்மையினரிடையே நம்பிக்கை ஏற்படவும் முயற்சிகள் நடந்தன. அதன் பயனாக வெளியேறிய முஸ்லிம்கள் திரும்பிவர ஆரம்பித்தனர். பாகிஸ்தானில் அதிகாரத்திலிருப்பவர்கள் ஆரம்பத்திலிருந்தே வகுப்பு ஒற்றுமையில் நம்பிக்கை கொண்டவர்களல்ல. ஆகையால் அங்கு நிலைமை மாறுதல் அடையவில்லை. முஸ்லிமல்லாதார் பாகிஸ்தான் திரும்பிச் செல்ல முடியவுமில்லை. பாகிஸ்தான் என்னதான் செய்தாலும் எப்படி நடந்து கொண்டாலும் அதற்காகவென்று இந்தியா தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள முடியாதென்று அடிக்கடி அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் தன்னுடைய கடமையை செய்தாலும் செய்யா விட்டாலும் இந்தியா தன்னுடைய கடமையைச்செய்ய பின்வாங்கக் கூடாதென்று மஹாத்மா காந்தி உபதேசித்தார். பாகிஸ்தான் தன்னுடைய பிரஜைகளை வரவேற்கா விட்டாலும் இந்தியா தன்னுடைய முஸ்லிம் பிரஜைகளை வரவேற்கும். நாம் ஒழுக்கத்தையும், நியாயத்தையும் கடைபிடிப்போம். பிரிந்து சென்ற நம் சகோதரர்களை ஆலிங்கனம் செய்து கொள்வோம். தாய்நாட்டுக்கு திரும்பிவர விரும்பும் ஒவ்வொரு முஸ்லிமையும் வரவேற்கப்படும். அவனுடைய வீட்டுக்கதவு அவன்மீது அடைக்கப்படமாட்டாது என்று அரசாங்கம் மஹாத்மா காந்தியிடம் உறுதியளித்திருந்தது. இந்திய பார்லிமெண்டில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் “பாகிஸ்தானில் என்ன நடந்தாலும் பாகிஸ்தானிலிருந்து திரும்பிவரும் முஸ்லிம்களுக்காக இந்தியக்கதவு திறந்தே வைக்கப்படும். மஹாத்மா காந்தியிடம் அளித்த வாக்குறுதிகளை நாம் காப்பாற்றுவோம்” என்று இந்தியப்பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு பட்டவர்த்தனமாக அறிவித்தார். அதைக்குறித்து ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்பட நியாயமுண்டு. இந்தியாவின் கண்ணியமான போக்கால், பாகிஸ்தானின் குறுகிய மனப்பான்மையுள்ள கண்ணியமற்ற தன்மையை பண்டிதநேரு உலகுக்கு

எடுத்துக்காட்டினர் துப்பாக்கி, ஈட்டி, கட்டாரிகளுக்கு பயந்து தாய்நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்ட இந்திய பிரஜைகள் பாகிஸ்தானில் பட்டினிகிடந்து அக்ரமங்களை சகித்து, தீங்கிழைக்கப்பட்டு முஸ்லிம் சகோதரர்களின் அலட்சியத்தால் மீண்டும் தங்கள் தாய்நாட்டுக்கே திரும்பிவர விரும்புகின்றனர் தீங்கிழைக்கப்பட்ட இந்திய பிரஜைகள் இந்தியாவில் நுழைய முடியாமல் கதவடைக்கப்படுமா! ஹிந்து, சீக்கியர்கள் பாகிஸ்தான் திரும்பிச் செல்ல முடியாமலிருப்பது வீடுவாசல்களை இழந்து பரதேசிகளாகிவிட்ட இந்திய முஸல்மான்களின் குற்றமா! இவ்விஷயத்தில் பாகிஸ்தான் தன்னுடைய கடைமை செய்யும்படி நிர்ப்பந்திக்கும் வகையில் இந்திய சர்க்கார் பாகிஸ்தானுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் அந்நிலையில் இந்தியாவில் இருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் பாகிஸ்தானிலிருந்து திரும்பிவரும் ஒவ்வொரு முஸ்லிமும், இந்தியா எடுக்கும் நடவடிக்கையை ஆதரிப்பான். முஸ்லிம்கள் திரும்பிவருவதை தடை செய்வதால் முஸ்லிம் அகதிகளின் உள்ளங்களில் அவநம்பிக்கையே ஏற்படும். பாகிஸ்தான் கர்த்தாக்கள் விரும்புவதும் அதுதான் பாகிஸ்தான் எப்படி நடந்துகொண்டாலும் இந்தியா தன்னுடைய முடிவின்படியே நடந்துகொள்ளும் என்று அறிவிக்கப்பட்ட பிறகு இன்று ஏன் பின்னடையவேண்டும்? இந்தியாவும் பாகிஸ்தானைப் பின்பற்றவிரும்புகின்றதா? மஹாத்மா காந்திஜியிடம் அளித்த வாக்குறுதிகளுக்கு மாறாக நடந்துகொள்ளப் போகின்றதா? அதுவும் மஹாத்மா காந்தியின் ஆத்மீக தியாகத்துக்குப் பிறகா? முஸ்லிம்கள் திரும்பி வருவதை தடை செய்வதற்கு காட்டப்படும் காரணங்கள் முற்றிலும் நியாயமானவை என்பதை ஒப்புக்கொண்டாலும் நம்முடைய பரந்த மனப்பான்மையை குறித்துநாம் கொண்டாடிய பெருமை எங்கே? பாகிஸ்தானிலிருந்து அவநம்பிக்கை அடைந்து தங்களுடைய மூதாதையர் நாட்டுக்கு திரும்பிவரும் முஸ்லிம்களை இழந்துவிட்ட குழந்தைகளை ஆலிங்கனம் செய்து கொள்வதைப் போல் இந்தியா அணைத்துக்கொள்வதால் உடைந்த உள்ளங்கள் மீண்டும் இணைக்கப்பட முடியும் மஹாத்மாகாந்தியின் உயரிய லட்சியங்களை விட்டு பாகிஸ்தானுடன் பேரம்பேசுவதால் இந்தியா தன்னுடைய மேம்பாட்டை இழந்துவிடும் என்பதை இந்திய சர்க்கார் மறந்துவிட்டனர் போலும்! மஹாத்மா காந்தியின் உயரிய லட்சியங்களை கருத்தில் கொண்டு இந்திய சர்க்கார் தன்னுடைய முடிவைக் குறித்து புனராலோசனை செய்யுமென்று எதிர்பார்க்கலாமா?

(மௌலானா மதனியின் அறிவுரை — 3-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணங்களை கவர்ந்து, உணர்ச்சிகளை வென்று, அந்நியர்களை ஆகர்ஷித்தனர். வித்தியாசங்களைப் போக்கி ஒன்று படுத்தினர்.

இன்று இஸ்லாமிய போதனைகளும், திரு குர் ஆனின் சட்ட திட்டங்களும் உங்களிடம் இருக்கின்றன. நீங்கள் உண்மையாக அவைகளைப் பின்பற்றினால் சரித்திரம் திருப்பி வாசிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இன்று முஸ்லிம்களுக்கு 'ஜிஹாத்' (புனித யுத்தம்) என்ற வார்த்தை மட்டும் ஞாபகமிருக்கிறது. மெக்கா வாசிகளைப்போன்ற இஸ்லாமிய விரோதிகளுக்கு எதிராக பொறுமை, உறுதி, தன்னடக்கம் சகிப்புத்தன்மையுடன் உயரிய ஒழுக்கத்தை எடுத்துக் காட்ட செய்யப்பட்ட முயற்சியை திரு குர் ஆன் 'ஜிஹாதே கபீர்' (பெரிய புனித யுத்தம்) என்று குறிப்பிட்டிருப்பதை முஸ்லிம்கள் மறந்துவிட்டனர்!

நேர்மையற்ற உணர்ச்சிகள், தவறான இச்சைகள் நீசத்தனமான எண்ணங்களை அகற்றி, சீரிய உணர்ச்சிகள், தூய எண்ணங்களால் உள்ளத்தை அலங்கரிப்பதற்கு 'ஜிஹாதே அக்பர்' (மாபெரும் புனித யுத்தம்) என்று திரு குர் ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜிஹாதே அக்பர், ஜிஹாதே கபீர் இரண்டுக்கும் கத்தி, கட்டாரி, ஈட்டி, பிச்சுவா தேவையில்லை. உறுதி, நேர்மை, தன்னடக்கம், சகிப்புத்தன்மையே தேவை. இவை கத்தி கட்டாரியைவிட சக்தி வாய்ந்தவை. பீரங்கியைக்கொண்டு போர் செய்வதைவிட இந்த போராட்டத்திற்கு உறுதி அதிகம் வேண்டும்.

இன்று முஸ்லிம்கள் அவநம்பிக்கை அடைந்துள்ளனர். முஸ்லிம்களாக இருந்தும் மேம்பாடு இழந்து வருவதற்குக் காரணம் என்னவென்று திகைப்பு ஏற்பட்டிருக்கிறது. முஸ்லிம் என்ற சொல்லுடன் மேம்பாடு இணைக்கப்படவில்லை. லட்சியம், செயல், ஒழுக்கமே மேம்பாட்டின் நிபந்தனைகளாகும். இழந்துவிட்ட கௌரவத்தை மீண்டும் பெற முஸ்லிம்கள் எண்ணினால் அழிவுத்துறையை எய்திவிட்ட தங்கள் நாகரீகத்தை உயிர்ப்பிக்க விரும்பினால் அவர்கள் வாழ்க்கையில் ஒழுக்கத்தை மேற்கொள்ளவேண்டும்.

உண்மையை உணர்ந்து இஸ்லாமிய ஒழுக்கம், சட்ட திட்டங்கள், போதனைகளை மேற்கொள்வதே தங்கள் வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டால் ஆண்டவனின் வெற்றி அவர்களுடன் இருக்கும் என்பது நிச்சயம்.

இந்திய தேசீய

ட்ரேட் யூனியன் காங்கிரஸ் கூட்டம்.

இந்தியாவில் ஒரு சிலரைத்தவிர மற்றவர்களனைவரும் பாட்டாளிகளே. ஏதாவதொரு விதத்தில் உழைத்தே வயிறுவளர்க்கின்றனர். தங்கள் உழைப்பை விற்று ஊதியம் பெறுகின்றனர். எண்பது சத விகித விவசாயிகளும் நகர வாழ்க்கையின் முதுகெலும்பான தொழிலாளர்களும் தங்கள் உழைப்பின் ஊதியத்தைப் பெற்று வாழ்க்கை நடத்தும் பாட்டாளி வர்க்கத்தை சேர்ந்தவர்களேயாவர்.

உழைப்பினால் உலகத்துக்கு ஜீவனளிக்கும் தொழிலாளவர்க்கம் முதலாளித்துவ கூட்டத்தின் தயவையே நாடியிருக்கின்றது. தன்னுடைய வாழ்க்கைத் தேவைகளை தன்னிஷ்டம்போல் பூர்த்தி செய்து கொள்ள முடியாமலிருப்பதே அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயராமலிருப்பதற்குக் காரணம். உழைக்க சுதந்திரம் பெற்றிருக்கும் பாட்டாளி மகனுக்கு வாழ்க்கைத் தேவைகளை பெறுவதில் சுதந்திரம் இல்லை. அவனுடைய உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்காமலிருப்பதே அதற்குக் காரணம்.

ஐந்து ரூபாய் உழைப்பை இரண்டு ரூபாய்க்கு விற்கிறான். அவனுடைய உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைத்துவிட்டால் அவன் முதலாளித்துவத்தின் தயவை எதிர்பார்த்து இருக்கவேண்டியதில்லை. ஐந்து ரூபாய் உழைப்புக்கு அவன் பெறுவது இரண்டே ரூபாய்தான். பாக்கி மூன்று ரூபாயும் முதலாளியின் இரும்புப் பெட்டிக்குள் போகின்றது.

தொழிலாளிகளை கசக்கிப் பிழிந்து சேர்க்கும் பணத்தை தன்னுடைய தொழிலை விஸ்தரிப்பதிலும் டாம்பீக செலவுகளிலும் முதலாளி செலவழிக்கிறான் இவ்விதம் நாட்டின் மூலதனம் ஒரு சில ஆசாமிகளின் இரும்புப் பெட்டிகளில் குவிய ஆரம்பிக்கிறது.

உற்பத்தியையும், நாட்டின் மூலதனத்தையும் பெருக்கும் தொழிலாளி அரைப் பட்டினியும் முக்கால் நிர்வாணியுமாக இருந்து வாழ்க்கை நடத்துவதற்கு போதுமான அளவு கூலியையே பெறுகிறான். முதலாளித்துவ கூட்டத்தின் நியாயமற்ற பங்கீட்டால் தொழிலாளி கொந்தளிக்க ஆரம்பித்து விடுகிறான். ஒன்றுபட்டு பெரிய மனிதர்களை எதிர்த்து கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துவிடுகிறான். தொழிலாளி, முதலாளி போராட்டம் என்று சொல்லப்படும் வர்க்கப் போர் ஆரம்பித்து விடுகின்றது. அதனால் வேலை நிறுத்தங்கள் தோன்றுகின்றன

இன்று உலகத்தொழிலாளி தன்னுடைய உரிமைகளுக்காக ஒன்றுபடுகிறான். அவனுடைய ஒற்றுமை டிரேட் யூனியன்கள் மூலம் வேலை செய்கின்றது. இந்தியாவில் அகில இந்திய டிரேட் யூனியன் காங்கிரஸ் தொழிலாளிகளின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக இருந்து வந்தது.

தொழிலாளர்களின் தலைவர்கள் அரசியல் லட்சியங்களுக்காக தொழிலாளர்களை உபயோகித்துக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு தீங்கிழைக்கின்றனர் என்று குறை கூறப்பட்டது. எனவே டிரேட் யூனியன் காங்கிரஸுக்கு எதிராக தேசீய டிரேட் யூனியன் காங்கிரஸ் உருவாயிற்று. அகில இந்திய தேசீய டிரேட் யூனியன் காங்கிரஸின் கூட்டம் சமீபத்தில் பம்பாயில் நடந்தது. பண்டித நேரு, சர்தார் பட்டேல் முதலிய சர்க்காரின் முக்கியஸ்தர்கள் தங்களுடைய வாழ்த்துச் செய்திகளை அனுப்பி கூட்டத்தை கவுரவித்தனர்.

தேசீய டிரேட் யூனியன் காங்கிரஸ் கூட்டத்தில் அரசியல் நோக்கங்களுக்காக தொழிலாளர்களை பிரயோஜனப் படுத்திக் கொள்ளும் தலைவர்களை கார சாரமாகக் கண்டிக்கப்பட்டது. வேலை நிறுத்தங்கள் நாட்டுக்கு அபாயகரமானவை என்றும் அதனால் உற்பத்தி தடைபட்டு நாடு பல புதிய துன்பங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கிறதென்றும் எச்சரிக்கப்பட்டது.

தொழிலாளியின் பயன்தரத்தக்க கடைசி ஆயுதம் ஸ்ட்ரைக்தான் முதலாளிக்கும் தனக்கும் ஏற்படும் தகராறுகளில் முதலாளிகளை பணியவைக்க உடனே அந்த ஆயுதத்தை உபயோகித்து விடுகிறான். தொழிற்சாலைகளை ஸ்தம்பிக்கச்செய்வதன் மூலம் தன்னுடைய கோரிக்கைகளுக்கு 'இணங்கும்படிச் செய்ய முயற்சிக்கிறான். தேசீய டிரேட் யூனியன் காங்கிரஸ் கூட்டத்தில் பேசப்பட்டதைப்போல் நாட்டுக்கு தீங்கு செய்யும் வேலை நிறுத்தங்கள் தோன்றி உற்பத்தி தடைபடுவதால் தேசத்தில் பெரும்பான்மையாக இருக்கும் பாட்டாளி வர்க்கமே பாதிக்கப்படுகின்றது .

இவ்வித தத்துவ வாதங்களில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது ஆயினும் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு அதனால் பிரயோஜனம் ஏற்பட முடியாது. தொழிலாளி தன்னுடைய தேவைகளை அடையவே விரும்புகிறான். முதலாளியைப்பற்றி அவ

பாலஸ்தீன் கண்ணுடியில் காஷ்மீர் பிரச்னை.

இன்று பாலஸ்தீனத்தில் நடப்பதை பார்த்தபிறகு பந்தோபஸ்து சபை அல்லது வேறு எந்த ஸ்தாபனத்தையும் இந்தியா எதிர்பார்க்காமல் ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி காஷ்மீரிலிருந்து படையெடுப்பாளரை விரட்டியடிக்க வேண்டுமென்று முடிவு செய்வதில் எள்ளளவு சந்தேகமும் இருப்பதற்கில்லை

பாலஸ்தீனப் பிரச்னையில் பந்தோபஸ்து சபையின் நிலைமை பரிதாபகரமானது. இவ்வித இந்த நிலைமைக்கு வல்லரசுகளின் சூழ்ச்சிகளே காரணம் பாலஸ்தீனம் யூதர்களின் தாயகமல்ல. யூதர்களின் உதவியைப் பெறுவதற்காக ஆங்கிலேயர்கள் தனித்தாயகம் ஏற்படுத்திக் கொடுப்பதாக யூதர்களுக்கு உறுதியளித்திருந்தனர் பிற்காலத்தில் அதேபோன்ற சில சுயநலங்களுக்காக தாங்கள் அளித்த வாக்குறுதியை தட்டிக்கழிக்க வேண்டிய அவசியம் ஆங்கிலேயர்களுக்கு ஏற்பட்டது. இந்த இடைக்காலத்தில் உலகத்தின் வேறு பாகங்களிலிருந்து லட்சக் கணக்கான யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறிவிட்டனர்.

தன்னுடைய சூழ்ச்சிகளால் எழுந்த தகராறு சர்வதேச சூழ்ச்சிகளில் அகப்பட்டு சந்திசிரிக்கவேண்டுமென்பதற்காக பாலஸ்தீனத் தகராறை ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தின் தலைமீது சுமத்திவிட்டு வெள்ளையர்கள் வெளியேறி விட்டனர். ஆரப்பத்தில் அமெரிக்கா பிரிவினையை விருப்பிற்று. அதை ஆதரிக்கவும் செய்தது. பிறகு ஏற்பட்ட ஒரு நிலைமையை உத்தேசித்து அமெரிக்கா பிரிவினையை ஆதரிக்காமல் இருந்து வந்தது. இன்று மீண்டும் அமெரிக்கா பிரிவினைக்காக துடியாய் துடிக்கின்றது.

பந்தோபஸ்துசபை சம்மந்தப்பட்டவரை அதனுடைய அதிகார பூர்வமான அந்தஸ்துக்கு இஸ்ரவேல் ராஜ்யம்; அரபுநாடுகள், அமெரிக்கா, பிரிட்டன் சவால் விடுத்திருக்கின்றன அதன் முடிவு மீறப்பட்டிருக்கிறது பந்தோபஸ்து சபைக்கு அதிகார பூர்வமான அந்தஸ்து இருக்கின்றதா என்பதே சந்தேகத்தில் இருக்கிறது பல்வேறு சக்திகள் கோஷ்டிப் பிரிவினையில் ஈடுபட்டிருக்கின்றன. ஜனநாயகக்கொள்கைகளை ஆரம்பத்திலேயே பாறைமீதுதூக்கி எரிந்தாயிற்று அதன்பயனாக ஏற்பட்டிருக்கும் போராட்டம் எப்பொழுது தீரும் என்று சர்ச்சை செய்யவேண்டிய அவசியமில்லை. ஐக்கியநாட்டு ஸ்தாபனம் எங்கே? என்ன செய்துகொண்டிருக்கின்றது? என்பதுதான் கேள்வி. பாலஸ்தீனத்தைக் குறித்து செய்யப்பட்ட முடிவுகளெல்லாம் மீறப்பட்டன. ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஜெருசலேம் பாதுகாப்புக்காக கமிஷன் அனுப்பப்பட்டது கமிஷன் ஜெருசலேமில் இருக்கும் பொழுதே அதை யாரும் லட்சியம் செய்யவில்லை. ஐக்கியநாட்டு ஸ்தாபனத்துக்கு திட்டமானதொரு கொள்கை இல்லாம

[10-ம் பக்கம் பார்க்க]

னுக்கு அக்கரை இல்லை. உற்பத்தி தடைபடுகின்றது மக்கள் கஷ்டப்படுகின்றனர் நான் கஷ்டப்படும்போது உலகம் மட்டும் ஏன் சுகப்படவேண்டும் என்ற எண்ணம் இயற்கையாகவே தொழிலாளிக்கு ஏற்பட்டு விடுகிறது. பொதுமக்களும் கஷ்டப்பட்டாலன்றி தன்னுடைய கோரிக்கையின் நியாயம் உணரப்படமாட்டாதென்று அவன் நினைக்கிறான்.

ஆயினும் வேலை நிறுத்தங்கள் எவ்விதத்திலும் நாட்டுக்கு நன்மை பயக்க முடியாது. அதனல் ஏழைகளின் வறுமை சுபிட்சமாய் மாறுவதும் சாத்தியமில்லை.

இருப்பினும் முதலாளிகள் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக இருக்க உரிமையில்லை என்பதையும் மறந்து விடுவதற்கில்லை அவர்களுக்கு ஏழைகளைப் பற்றிய கவலை இருக்கமுடியாது. சட்ட சபைகளில் தொழிலாளர்களுக்கு முதலாளிகள் வக்காலத்து வாங்கிப் பேசலாம் ட்ரேட் யூனியன் காங்கிரஸில் நிலச்சுவான்தார்கள் ஆதிக்கம் வகிக்கலாம். அவர்கள் என்னவாக இருந்தாலும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக மட்டும் இருக்கமுடியாது தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் தொழிலாளிதான் வகிக்க முடியும். ஏழைகளின் உணர்ச்சிகளை அப்பொழுதுதான் வெல்வது சாத்தியமாகும்.

வேலை நிறுத்தங்கள் நாட்டுக்கு நல்லதல்ல. பட்டினி கிடப்பவர்களை அரசியல் லட்சியங்களுக்காக உபயோகிப்பது அபாயம். முதலாளித்துவத்தை முறியடிக்க பலாத்காரப் புரட்சியே வழி என்பது பைத்தியக்காரத்தனம். அத்துடன் முதலாளிகள் ஏழைகளின் பிரதிநிதிகளல்ல என்பதையும் தேசிய ட்ரேட் யூனியன் வாய்ப்பேச்சால் தொழிலாளர்களை திருப்தி செய்து விட முடியாதென்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். தொழிலாளர்களிடையே செல்வாக்குபெற சரியான வழியில் முயற்சிக்கவேண்டும். அத்துடன் மூலதனத்தை பெருமளவுக்கு தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். பிறகு நாமும் நிம்மதியுடனிருக்க முடியும். தொழிலாளர்களும் திருப்தியுடன் வாழ்வார்கள்.

பாலஸ்தீனில் வல்லரசுகளின் சூழ்ச்சிகள்.

மத்திய தரைக் கடல் தென் கிழக்குக் கரையிலிருக்கும் 10,420 சதுரமைல் விஸ்தீரணமுள்ளதொரு சிறிய பிரதேசமான பாலஸ்தீனத்தை பிரிட்டிஷ் பிரிவினை அடியிற்கண்ட மூன்று கூறுகளாகப் பிரித்துவிட்டது.

1. லெப்னனில் நாகூரா முனையிலிருந்து ஆரம்பித்து தொடர்ச்சியாக அக்கா, ஹைபா, டெல் அவீவ், ஜாபாவைத்தாண்டி தெற்கில் எகிப்திய எல்லையிலுள்ள ரபா வரையிலுள்ள பிரதேசம்.

2. ஜெருசலேம் சுற்றுப்புறங்கள் உள்பட மலைப்பாங்கான மத்திய பிரதேசம்

3 தெற்கில் பஹ்ரமீத்தைச் சேர்ந்த சரிவான பிரதேசம்.

பாலஸ்தீனம் சிறிய ஜனத்தொகை, குறைவான உற்பத்தி, குறிப்பிட்ட வருமானமுள்ள ஒரு நாடு 1939 கணக்குப்படி இங்குள்ள ஜனத்தொகை பதினன்கு லட்சத்து முப்பத்தையாயிரம். பத்துலட்சம் அரபியர்கள். நான்கு லட்சத்து முப்பத்தையாயிரம் யூதர்கள் இன்று பன்னிரண்டு லட்சம் அரபியர்களும் ஐந்து லட்சம் யூதர்களும் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. அரபியர்களின் எண்ணிக்கையில் மூன்று லட்சம் அராபிய கிருஸ்தவர்களும் அடங்கியிருக்கின்றனர்

ஐக்கியநாடுகள் அநியாயத் தீர்ப்பு

ஒரு நாடு முன்னேறுவதற்கு வேண்டிய வசதிகளை எவ்விதத்திலும் தானே செய்துகொள்ளும். ஆனல் துரதிர்ஷ்டவசமாக பாலஸ்தீன முன்னேற்றம் சம்மந்தப்பட்டவரை அவ்வித வசதிகள் அனைத்தையும் நேசநாடுகள் யூதர்களிடம் ஒப்படைத்துவிட்டன நாளாவட்டத்தில் மெள்ளமெள்ள பாலஸ்தீனம் முழுவதையுமே யூத நாடாக மாற்றிவிடக்கூடிய வசதிகளுடன் ஏழை அரபியர்களின் மார்பில் யூதர்கள் புரையோடிய புண்ணாக இன்று அமைந்து விட்டனர்.

யூத நாட்டுக் கோரிக்கை பிரிட்டிஷ் சூழ்ச்சிகள் பெற்றெடுத்த குழந்தை. அதை அமெரிக்கா தன்னுடைய மடியில் வளர்த்து வாலிபனாக்கிற்று. பிரிட்டனும் அமெரிக்காவும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் செல்வாக்கு பெற்றிருக்கின்றன எனவே ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் சென்ற நவம்பரிலிருந்து பாலஸ்தீனப்பிரச்னையை தானே எடுத்துக்கொண்டிருக்கிறது.

ஒரு சிறிய நாட்டை மூன்றாகப் பிளந்து மூன்று நாடுகளாக்கப் வேண்டுமென்பதே பாலஸ்தீன விஷயத்தில் ஐக்கிய நாடுகள் செய்த முடிவு. சுதந்திரம் ஜனநாயகம் என்று தொண்டை கிழியப் பேசும் உலக சமாதான பாதுகாப்பு வீரர்கள் பதினேழு லட்சம் மக்களைக்கொண்டதொரு நாட்டில் ஜனநாயகத்தின் தலையைத் திருகிய இக்கொடூரத்துக்கு சரித்திரத்திலேயே நிகரில்லை.

ஒரு பக்கம் பன்னிரண்டு லட்சம் பாலஸதீன் அராபிய பூர்வீகக்குடிகளும் இன்னொரு பக்கம் ஐந்து லட்சம் அன்னிய நாட்டு யூதர்களும் இருந்தனர். ஆயினும் தற்கால ஜனநாயகத்தின் விசித்திரப்போக்கு பன்னிரண்டு லட்சம் பூர்வீகக்குடிகளின் ஏகோபித்த முடிவைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு ஐந்து லட்சம் அன்னியர்களின் விருப்பத்துக் கிணங்க பாலஸ்தீன உடலை ஆபரேஷன் செய்து கடற்கரையோரமுள்ளவளமான பிரதேசங்கள், ராணுவ கப்பல் தளங்களை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டது.

1947 நவம்பர் இறுதியில் பாலஸ்தீனத்தை யூத ராஜ்ஜியம், அரபு ராஜ்ஜியம், சர்வதேச ஸ்தலம் என்று மூன்று கூறுகளாய் பிரிக்க ஐக்கிய நாட்டு பொது சபை முடிவு செய்தது 33 நாடுகள் ஆதரித்தன. 13 நாடுகள் பிரிவினையை எதிர்த்தன.

ஐக்கிய நாடுகள் செய்த முடிவை நடைமுறையில் கொண்டுவர சிரியா, செக்கோஸ்லோவேகியா, டென்மார்க், பனமா, பிலிப்பைன் நாடுகளை மெம்பர்களாகக்கொண்ட ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது.

பிரிட்டன் மாண்டேட் ஆட்சி முடிவடைந்தவுடன் பாலஸ்தீன நிர்வாகப் பொறுப்பை மேற்கூறிய கமிஷன் ஏற்றுக்கொள்ளுமென்றும் பின்னல் அரபு பிரதேசங்களின் நிர்வாகம் அரபியர்களிடமும், யூதப் பிரதேசங்களின் நிர்வாகம் யூதர்களிடமும் ஒப்படைக்கவேண்டுமென்றும் ஜெருசேலம் எம்பொழுதும்போல் சர்வதேச ஆட்சியின்கீழ் இருந்துவர வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

‘ ஒரு ஜாதியினருக்கு நஷ்டம் உண்டுபண்ணும் வகையில் இன்னொரு ஜாதியினருக்கு தானம்செய்வது எவ்விதத்திலும் உகந்ததல்ல பிரிவினையும் யூத நாட்டை அமைக்க நடக்கும் எந்த ஒரு முயற்சியும் கிழக்கையும் மேற்கையும் யுத்தத்தில் இழுத்து விடக்கூடியதாகவே இருக்கும்'' என்று பிரிவினைக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே அரபியர்கள் அமெரிக்க ஜனதிபதி ட்ரூமனை எச்சரித்திருந்தனர்.

பாலஸ்தீனத்தில் யூத அராபிய ராஜ்யங்களின் எல்லைகளை நிர்ணயிக்க எல்லைக் கமிஷன் நியமிக்கப்பட்டிருப்பதாக ஜனவரி 20-ந்தேதி ஐக்கிய நாடுகள் சார்பில் அறிவிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்குள் அரபு படைகள் பூர்த்தியாக தயாரிக்கப்பட்டு பிரிட்டிஷ் மாண்டேட் ஆட்சி முடிவடைந்ததும் எல்லைகளைத்தாண்டி யூத பிரதேசங்களை அரபு படைகள் ஆக்ரமித்துக்கொள்ளுமென்று ஜனவரி மாதம் 19-ந்தேதி அரபு லீகின் பிரசார இலாகா காரியதரிசி உலக நாடுகளுக்கு அறிவித்தார்.

ஐக்கிய நாடுகள் செய்த முடிவு ஜனநாயகத்துக்கு மாறானது. ஐக்கிய நாட்டுஸ்தாபனம் பிரகடனம் செய்த தன்னுடைய லட்சியத்துக்கே புறம்பானது. எனவே அதற்கு ஜனநாயக உலகத்தில் அரசியல் முக்கியத்துவம் கிடையாது. ஐக்கிய நாடுகள் தன்னுடைய லட்சியத்தை கடைப்பிடித்து நடக்க வேண்டியது கடமை. சிறிய நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டியது அதன் பொறுப்பு. ஒரு ஜாதியினரின் சுதந்திரத்தை பிடுங்கி இன்னொரு ஜாதியினருக்கு கொடுப்பது சரியல்ல. ஒரு தேசத்தின் பூர்வீக குடிகளை வெளியாரின் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும். ஒரு நாட்டின் விதி அங்குள்ள பெரும்பான்மையினரால் முடிவு செய்யப்படவேண்டுமென்பதை எச்சந்தர்ப்பத்திலும் அலட்சியம் செய்துவிடுவதற்கில்லை. மேற்கூறிய விஷயங்கள் புறக்கணிக்கப்படுமானால் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் அமைப்பால் எவ்வித பிரயோஜனமுமில்லை. ஐக்கிய நாடுகள் செய்த முடிவு சட்டத்துக்கு புறம்பானது இப்பிரச்னையில் பாலஸ்தீனத்தில் உள்ள பெரும்பான்மையினரின் முடிவை அனுஷ்டிப்பது அசாத்தியமானால் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் பெரும்பான்மையினரால் செய்யப்படும் முடிவுக்கு பாலஸ்தீன மக்கள் கட்டுப்படமுடியாது. இம்மாதிரியான முடிவுகள் அரபு ஜாதியை, ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள முஸ்லிம்களை உலக ஜனநாயக தேசங்களை எவ்விதத்திலும் கட்டுப்படுத்த முடியாது என்பது அரபியர்களின் முடிவு

1947 நவம்பரில் பாலஸ்தீனப் பிரச்னையில் செய்யப்பட்ட முடிவு ஐக்கிய நாடுகளின் மெஜாரிடி தீர்ப்பு என்பது வாஸ்தவந்தான். பிரிட்டன் அமெரிக்கா மட்டுமின்றி ரஷ்யாவும் அதை ஆதரித்தது என்பதும் உண்மையே இருப்பினும் சரித்திர நீதிமன்றத்தில் ஒரு நாட்டின் சுதந்திரத்தையும் அகண்ட தன்மையும் பலவந்தமாக பிரித்துவிட முடியாது ஐக்கிய நாடுகளின் மெஜாரிடி செய்யும் முடிவு சம்மந்தப்பட்ட நாட்டின் மெஜாரிடிக்கு தீங்கு விளைவிக்கக்கூடியதாகவோ, அமைதிக்கு பங்கம் விளைவித்து உலக சமாதானத்துக்கு உலை வைக்கக்கூடியதாகவோ இல்லாமலிருக்க வேண்டியதவசியம்.

கடந்த நவம்பரில் பந்தோபஸ்து சபைக்கு பதிலாக சமாதான பொறுப்புக்களை நிறைவேற்ற ஒரு தற்காலிகக் கமிட்டி அமைக்க வேண்டுமென்ற யோஜனை மீது ரஷ்யப் பிரதிநிதி விஷன்ஸ்கி அடியிற்கண்ட விதமாகப் பேசினார்.

“தோழர்களே! உங்களுடைய பெரும்பான்மை போக்கில் அடித்துக்கொண்டு போய்விடாமல் இருங்கள். சர்வதேசப் பிரச்னைகளில் பெரும்பான்மையின் முடிவு இறுதி முடிவாக இருக்கவோ பெரும்பான்மை செய்யும் எல்லா முடிவுகளும் நியாயமானவை என்று எற்றுக்கொள்ள வோமுடியாது. சமர்ப்பிக்கப்பட்டுள்ளபிரச்னைகளில்பரஸ்பர ஒத்துழைப்பு, நல்லெண்ணம் நம்பிக்கை மிகவும் அவசியமாகும்.”

பாலஸ்தீன பிரிவினையை 33 நாடுகள் ஆதரித்தன 13-நாடுகள் எதிர்த்தன இன்று பிரிட்டன், அமெரிக்கா ரஷ்யாவை நோக்கி ரஷ்யப்பிரதிநிதி விஷன்ஸ்கியின் வார்த்தைகளை பாலன்தீன அரபியர்கள் அப்படியே திருப்பிச் சொல்ல முடியும்.

400 மைல் ஆபரேஷன்.

இன்று 10,420 சதுரமைல் விஸ்தீரணமுள்ள ஒரு பிரதேசத்தை துண்டாட முயற்சிகள் நடக்கின்றன. அநியாயத்தை ஆதரிக்கும் சக்திகள் அணைத்தும் அதற்கு ஒத்துழைக்கின்றன ஆனால் உலக சரித்திரத்தில் பலம் வாய்ந்த அநியாயக்காரர்களை பலஹீனமான தீங்கிழைக்கப் பட்டவர்களே எப்பொழுதும் எதிர்த்து வந்திருக்கின்றனர் இன்று அரபியர்கள் அநியாயத்தை எதிர்த்து நிற்கின்றார்கள். உலகத்தின் மிகப்பெரிய நீதிமன்றத்தின் நீதிபதிகள் அநியாயமான தீர்ப்புசெய்தனர் அந்ததீர்ப்பை ஸ்டாலினுடைய உருக்கு சக்தியும் ஆதரித்தது. பிரிட்டிஷ் சூழ்ச்சிகளும் அமெரிக்க அணுதுண்டுகளும் பக்கபலமாய் இருந்தன ஆயினும் ஏழுகோடி அரபியர்கள் அந்த முடிவை தகர்த்து அலங்கோலமாக்கி தூக்கியெறிந்துவிட்டனர் என்று அரபியர்கள் உலதுக்கு நிரூபித்துக் காட்டவே போகின்றனர்.

பால்போர் அறிக்கை வெளிவந்தபோது சில ஆயிரம் யூதர்களே இருந்த ஒரு நாட்டில் ஐந்துலட்ச யூதர்களை ஐரோப்பாவிலிருந்து கொண்டுவந்து பலவந்தமாக குடியேற்றி நாட்டைக்கூறுபோட செய்யப்படும் முயற்சியைவிட உலகத்தில் அநியாயத்துக்கு

வேறு என்ன உதாரணம் இருக்கமுடியும்? . 3200 வருஷங்களுக்கு முந்திய சரித்திரத்தை ஆதாரமாகக் காட்டி பாத்தியதை கொண்டாடி ஒருநாட்டை அநியாயமாக ஆக்ரமிக்க செய்யப்படும் முயற்சிக்கு ஐக்கியநாட்டு ஸ்தாபனமும் இணங்கியிருக்கிறது. தன்னுடைய சக்தியைக்கொண்டு அநியாயமான முடிவை அரபியர்களும்! உலக ஜனநாயகவாதிகளும் ஒப்புக்கொள்ளும்படி செய்ய முயற்சிக்கின்றது.

பாலஸ்தீனத்திலுள்ள அரபு கிருஸ்துவர்களும் அரபு முஸ்லிம்களுமாகச் சேர்ந்து கடந்த ஏழுவருஷங்களாக பாலஸ்தீனத்தில்யூதர்கள்குடியேற்றப்படுவதை எதிர்த்து வருகின்றனர். ஆயினும் ஆயுதபலத்தைக் கொண்டு யூதர்கள் குடியேற்றப்பட்டு விட்டனர். அரபியர்களின் போராட்டம் புனிதமானது. தேசிய அடிப்படையில் அவர்கள் போராடுகின்றனர். இந்திய தேசிய போராட்டத்துக்கு எதிராக முஸ்லிம் லீகர்களை கிளப்பிவிட்டு இந்தியாவை பிரித்துவிட்டதைப் போலவே பாலஸ்தீனிலும் அரபியர்களின் தேசியப் போராட்டத்துக்கு எதிராக யூதர்களை குடியேற்றி பாலஸ்தீனத்தை துண்டாட முயற்சிக்கப்படுகிறது. தேசிய ஜனநாயக வாதிகளின் ஆதரவு தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரபியர்களுக்கு இருந்துவரும் என்பதில் சந்தேகமில்லை

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

லிருக்கையில் யாரும் எப்படி லட்சியம் செய்வார்கள்? பந்தோபஸ்து சபைக்காக கோடிக்கணக்கான சவரன்கள் செலவிடப்படுகின்றது. அதனுடைய உத்திரவுகளையும் முடிவுகளையும், ஏற்பார்தான் யாருமில்லை. இவ்வித நிலைமையில் பந்தோபஸ்து சபையின் நியாயத்தை நம்பி காஷ்மீரின் எதிர்காலம் விடப்படுமானல் முடிவடையாத ரத்தக்களரியைத்தவிர வேறு எவ்வித பலனும் ஏற்படமுடியாது. காஷ்மீர் பிரச்னையைத்தீர்க்க பந்தோபஸ்து சபை செய்திருக்கும் முடிவு ஒருதலைப் பட்சமானது.

காஷ்மீர் பிரச்னையில் இதர சக்திகள் இந்தியாவுக்கு எதிராக ஆதிக்க வேட்டையில் இறங்கியிருக்கின்றன. ஆகையால் மீண்டும் பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு சந்தர்ப்பமளிக்கும் வகையில் காஷ்மீர் பிரச்னை ஒத்திப்போடப்பட்டால் சுயநலத்துக்காக பிறர் நலத்தைப் பலியிட கச்சை கட்டி நிற்கும் சக்திகள்பிரச்னையை மேலும் சிக்கலாக்கிவிடக்கூடும். காஷ்மீர் பிரச்னையை வீட்டு விஷயமாக பாவித்தே தீர்க்க முடியும். அதற்குச் சிறந்த வழி ராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்குவதேயாகும். படையெடுப்பாளரை வெளியேற்றியே தீருவோமென்று சபதம் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற சந்தர்ப்பம் இதுதான்.

இல்லையேல் பாலஸ்தீனப் பிரச்னை தீர்ந்தபிறகு இன்று பாலஸ்தீனில் இரத்தம் சிந்தப்படுவதற்குக் காரணமாய் இருக்கும் சக்திகளே நாளை படையெடுப்பாளருக்கு உதவி செய்ய காஷ்மீரில் வரலாம். இன்றைய நிலைமையில் ஒரு சாரார் நவீன யுத்ததளவாடங்களையும், ஆகாய விமானங்களையும் பெறுவது சிரமமான காரியமல்ல இன்று பாலஸ்தீனத்தில் எல்லாம் நடந்துவருகிறது. நாளை காஷ்மீரில் நடப்பதும் சாத்தியமே. அந்நிலையில் பிரச்னை இன்னும் சிக்கலாய் விடும்.

அவ்வித நிலைமை ஏற்படாமல் தடுக்க வேண்டுமாயின் காஷ்மீரில் நடக்கும் மக்கள் ஆட்சியையும் அப்துல்லா சர்க்காரையும் இந்திய சர்க்கார் சாத்தியமான எல்லா துறைகளிலும் பலப்படுத்தி ராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

"ஆஸாத்"
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

தற்கால அரசியல் அறிவு வளர்ச்சியடைய அவசியம் படிக்கவேண்டும். சிக்கலான அரசியல் உலகத்தில் இன்று 'ஆஸாத்' சமூகத்தை நேரான பாதையில் முன்னேறச் செய்கிறது. சொற்ப காலத்தில் புது அரசியல் உணர்ச்சியை எங்கும் உண்டாக்கியிருப்பதை தாங்கள் கவனித்திருக்கலாம். உங்கள் ஊரில் 'ஆஸாத்' ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுத்துக் கொள்ளுங்கள். இது உங்கள் தேசியக் கடமை. 'ஆஸாத்' சந்தாதாரர்களாக ரூ. 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்,
"ஆஸாத்"
கும்பகோணம்.

ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

அவர்கள் இருவரும்.

:o:

"விடுதலைக்காக ஒன்றும் செய்யாவிட்டாலும் பேச்சுக்கு மட்டும் குறைவில்லை. விடுதலைப் போராட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டு பாகிஸ்தான் வாங்கப் போகிருர்களாம்! பாகிஸ்தான்! காங்கிரஸைக் தாக்கி மௌலானு ஆஸாதைக் காங்கிரஸ் கூலி யென்று சொல்வதுதான் பாகிஸ்தான் போராட்டமோ! இந்தியா விடுதலையடையாதவரை பாகிஸ்தானும் ஏற்பட முடியாது. பாகிஸ்தான் ஏற்படுவதற்கு முதலில் இந்தியா விடுதலையடைந்தாக வேண்டும். வெள்ளைக்காரர்களிடம் மண்டிபோட்டு காங்கிரஸ் மீது பாய்வதால் பாகிஸ்தான் வாங்கிவிட முடியாது.

அவ்வளவு தான். ராமுவுக்கும் ஷம்ஸுவுக்கும் காரசாரமான விவாதம் ஆரம்பமாய்விடும். இது நடக்காத நாளில்லை. ஷம்ஸுவின் வீட்டுக்கு எதிர் வீட்டில் ராமு இருந்தான். இருவருக்கும் ஒரே வயது. சேர்ந்துபடித்தவர்கள். ராமு ஆபீஸுக்கு புரப்படுவான். ஷம்ஸு கடைக்கு கிளம்புவான். முதல் நாள் இரவு ரேடியோவில் கேட்ட செய்தியிலிருந்து விவாதம் தொடங்கும். ஹிந்துஸ்தான் பாகிஸ்தானில் போய் முடியும். ஆரம்பம் எதுவாக இருந்தாலும்முடிவு பாகிஸ்தானுகத்தான் இருக்கும். கைகலப்பு ஒன்றைத்தவிர வார்த்தைகள் சரமாரியாக பரிமாறிக் கொள்வார்கள்.

"முஸ்லிம் லீக் பாகிஸ்தான் வாங்கிக் கிழிக்கப் போவதைப் பார்க்கலாம்!"

"உங்கள் காங்கிரஸையும், காந்தியையும் தெரியும்! தேசீய ஸ்தாபனமாம். முஸ்லிம்களை ஏய்க்கவா?"

வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடையும் போது இருவரும் பிரிந்து சென்று விடுவார்கள்.

"வீண்பேச்சு! இதனுல் மனக்கசப்புதான் மிச்சம். இனி அந்தப்பேச்சே கூடாது. இது ஒரு பொது பிரச்னை. அதைப்பற்றிப்பேசி நாம்ஏன் கசந்து கொள்ள வேண்டும். எத்தனையோ இதர விஷயங்கள் பேசலாம். இந்த ஒரு பேச்சுத்தானு?" என்று இருவருமே சிந்திப்பதுண்டு.

இரவு எட்டு மணி. ராமு ஷம்ஸு வீட்டுக்கு வருவான்.

"நஸ்ரு! நஸ்ரு! அப்பாயிருக்கிறாரா?"

ஷம்ஸு ஹுக்காவை எடுத்துக் கொண்டு சிரித்துக் கொண்டே வருவான்.

"யார் ராமுவா! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்."

திண்ணையில் சதுரங்கம் ஆரம்பமாகும். இருவரும் ஆடுவார்கள், அன்றைய பத்திரிகையில் வெளியான ஏதாவதொரு செய்தியை ஷம்ஸு நினைத்துக் கொள்வான்.

"இருந்தாலும் உங்கள் பட்டேலுக்கு வாய்த் துடுக்குதானப்பா? இன்று காயிதே ஆஜமைத் தாக்கி கன்னுபின்னு என்று பேசியிருக்கிருர். படேலுக்கு என்ன தெரியும்? அரசியலில் ஜின்னுவிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்!"

"நானும் பத்திரிகையைப் பார்த்தேன். படேல் பேசியிருப்பதில் தவறு ஒன்றுமில்லை. பட்டேல்...."

"ரொம்ப நியாயமாய் பேசியிருக்கிருர்! என்ன? முஸ்லிம்களை காங்கிரஸ் மோசம் செய்யப் பார்க்கின்றது. படேல் ரொம்ப நியாயஸ்தராம்!"

சதுரங்க ஆட்டம் நின்றுவிடும். யானை, ஒட்டை, குதிரை, படகு, ராஜா, மந்திரி அந்தந்த கட்டங்களில் அப்படி அப்படியே அசையாமல் நிற்கும். சுதந்திர இந்தியாவும், பாகிஸ்தானும் மோதும். இருவருக்கும் ஆவேசம் வந்துவிடும். ஒருவனும் அடங்கமாட்டான். ரேடியோ அவர்களுக்கு வாய்ப்பூட்டுபோடும். செய்திகளை கேட்டுவிட்டு பேசாமல் எழுந்து போய் விடுவார்கள்.

"இந்த சர்ச்சையே சரியில்லை. இந்த பேச்சு பேசமாட்டேன். தலைவர்கள் பேசித்தீராத ஒரு பிரச்னை நாம் பேசித்தீரப் போவதில்லை." என்று ஷம்ஸு சலிப்படைவான்.

பொழுது விடிந்து மணி எட்டடிக்கும். ராமு ஆபீஸுக்கு புறப்படுவான். ஷம்ஸு கடைக்கு கிளம்புவான். சந்தித்தவுடன் இருவருடைய முகங்களும்பலரும். ஹிந்துஸ்தான், பாகிஸ்தான் பற்றிபேசாவிட்டால் ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போன்ற உணர்ச்சி. விவாதம் ஆரம்பிக்கும். என்னதான்பேசிக் கொண்டாலும் இருவரும் ஒழுக்கத்தைமட்டும் இழப்பதில்லை. ஹிந்துக்கள் அனைவரும் ஒரே மாதிரி என்று

நினைப்பான் ஷம்ஸு "முஸ்லிம்களுக்கு கொஞ்சங் கூட அபிமானமில்லை. சுதந்திரப் போராட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர்" என்பான் ராமு

ராமு உண்மையில் காங்கிரஸ்காரனுமல்ல; அவன் கதரும் அணிவதில்லை. திடீரென்று ராமு கதர் உடுத்த ஆரம்பித்தான். காந்திக் குல்லாய் தலையில் பிரகாசிக்க தக்ளியும் கையுமாக காட்சியளித்தான் அவனைப் பார்த்து ஷம்ஸுவுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. ராமுவின் திடீர் மாறுதலை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. நகரகாங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தினனாக தான்தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதை சொல்லி ஷம்ஸுவின் ஆச்சரியத்தை ராமுவே போக்கினான்.

"பேஷ்! நேற்றுவரை பனியா, இன்று ஸேட்! இரண்டாவது ஜவஹர்லால் நேரு ஆகிவிட்டாய், சுதந்திரம் பெற்ற பிறகு ஏழை முஸ்லிம்கள் மீதும் தயவிருக்கட்டும்!"

"முஸ்லிம்களை யாரப்பா அலட்சியம் செய்கிறார்கள். விடுதலைக்காக போராட முஸ்லிம்கள்தான் முன் வருவதில்லை"

உடனே சர்ச்சை ஆரம்பமாய் விட்டது. இருவருக்கும் பேசிப்பேசி சகஜமாய் விட்டது. ராமுவை இரண்டாவது ஜவஹர்லால் என்பான் ஷம்ஸு ஷம்ஸுவை நவாப் ஜாதாலியாகத் அலிகான் என்று அழைப்பான் ராமு.

"8 ஆகஸ்ட், 1942......தலைவர்கள் கைது...."

அந்த ஊரிலும் கண்டன ஊர்வலங்கள் தடியடி துப்பாக்கிப் பிரயோகங்கள் நடந்தன. காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை அதிர்ஷ்டசாலிகள் என்றே சொல்ல வேண்டும். தடியடியால் அவர்களுடைய மண்டைகள் பிளக்கவோ துப்பாக்கி குண்டுகளால் நெஞ்சங்கள் துளைக்கப்படவோ இல்லை. பொதுமக்கள்பொங்கி எழுந்தனர் துப்பாக்கிக்குபயந்து தங்கள் தோல்வியை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. தேசிய கோஷங்கள் வானைப் பிளந்தன.

ஷம்ஸு ஒரு வாரமாக ராமுவை சந்திக்கவில்லை. போராட்டத்தில் சம்மந்தப்படும் அளவுக்கு தீவிர காங்கிரஸ்வாதியாக ராமு இருப்பான் என்று ஷம்ஸு நம்பவில்லை. சந்திக்கும்போது "விடுதலை வீரரே உன்னுடைய வீராப்பு எங்கே?" என்று கேட்க வேண்டுமென்று ஷம்ஸு திட்டமும் போட்டிருந்தான்.

ஆகஸ்ட் 15-ந்தேதி ராமுவின் வீட்டை போலீஸார் சோதனை போட்டனர். வீட்டு சாமான்களெல்லாம் வெளியே தூக்கி யெறியப்பட்டன. ராமுவின் தம்பியும் கைது செய்யப்பட்டான். ஐந்து தினங்களாக ராமு தலைமறைவாய் இருப்பதாகவும் போலீஸார் அவனை தேடிக்கொண்டிருப்பதாகவும் ஷம்ஷு கேள்விப்பட்டான்,

ஷம்ஸுவின் கண்கள் சிவந்தன. குற்றவாளி ராமுவா! அவனுடைய தம்பியா! தட்டுமுட்டு சாமான்களும் மேஜை நாற்காலிகளும் செய்த குற்றம் என்ன! ஆயினும் போலீஸ் அக்ரமத்தை எதிர்த்து அவனால் என்ன செய்ய முடியும்! பேசாமல் சாப்பிட்டு விட்டு கடைக்குச் சென்றான். முன்னேரத்திலேயே கடையை மூடிவிட்டு அவசரம் அவசரமாக வீட்டுக்குத் திரும்பினான். "நஸ்ரூ, எதிர்வீட்டு சித்தியிடம் போய் சமாசாரத்தை கேட்டுத் தெரிந்து கொண்டு வா."

நஸ்ரூ ராமு வீட்டுக்குச் சென்று திரும்பிவந்தான். "அப்பா! சித்தி அழுது கொண்டிருக்கிறார்கள்."

"அடே முட்டாள்! சித்தியிடம் விஷயத்தைக் கேட்டாயா? இல்லையா? ஆகக்கூடியது ஏதாவது இருந்தால் என்னை அன்னியனாக பாவிக்க வேண்டாம் என்று நான் சொன்னதாக சித்தியிடம் போய்ச் சொல்லு."

நஸ்ரூ திரும்பவும் ராமு வீட்டுக்குப் போய் திரும்பிவந்து, "அப்பா! சித்தி உங்களையே கூப்பிடுகிறார்கள்."

அந்தி மங்கியவேளை. ராமுவீட்டுக்குள் இருட்டாகவே இருந்தது. ஷம்ஸு வீட்டு வாசலில் வந்து நின்றான். "சித்தி அப்பா கதவண்டை நிற்கிறார்" என்று நஸ்ரூ சொன்ன மாத்திரத்தில் ராமுவின் மனைவி ஓவென்று அழ ஆரம்பித்து விட்டாள்.

"ஐந்து தினங்களாக அவரைப் பற்றிய தகவல் இல்லை. அவர் உயிருடன் இருக்கிறாரா! இல்லையா! என்றுகூடத் தெரியவில்லை மைத்துனரும் கைது செய்யப்பட்டார். வேலைக்காரனும் பயந்து ஓடிவிட்டான். வீட்டு சாமான்களை எல்லாம் அள்ளிக் கொண்டு போய் விட்டனர். நகைகளையும் விடவில்லை."

அதற்குப் பிறகு அவளால் பேச முடியவில்லை. தொண்டையடைத்துக் கொண்டது.

நிலைமையை ஷம்ஸு தெரிந்து கொண்டான்.

"சகோதரி! கவலைப்பட வேண்டாம். ஆண்டவனை நம்புங்கள். ஆகவேண்டிய ஏற்பாடுகளை நான் இப்பொழுதே செய்கிறேன்." ஷம்ஸு தன்னுடைய வீட்டுக்குள் நுழைந்தான்.

"இந்த பெண்களுக்கே விஸ்வாசம் என்பது கிடையாது! ராமு பாபு வீட்டிலோ துன்பம்! நீ என்னவென்றால் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டு வெற்றிலை மடித்துக் கொண்டிருக்கிறாய்! நாளைக்கு உனக்கு ஏதாவதென்றால் யார் உதவப் போகின்றார்கள்?"

"நீங்கள் வந்தால் கேட்டுக் கொண்டு போகலாமென்று எந்நேரமாய் காத்துக் கொண்டிருந்தேன். கேட்காமல் போய்விட்டால் உடனே கண்டபடிபேச ஆரம்பித்து விடுவீர்கள் என்ற பயம்தான். இல்லாவிட்டால் எப்பொழுதோ போயிருப்பேன்."

"சரி நீ அடங்கி நடப்பதெல்லாம் பிறகு பேசலாம். நஸ்ரூவை கூட்டிக்கொண்டு முதலில் நீ புறப்படு. படுக்கை வகையறாக்களை பீர்பக்ஷ் கையால் அனுப்புகிறேன். இந்த ஐம்பது ரூபாயை ராமு மனைவியிடம் கொடுத்து விடு."

எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு ஷம்ஸு படுக்கச் சென்றான். அவனுக்கு தூக்கம் பிடிக்கவில்லை. வீடு வெறிச்சென்றிருந்தது வீடு கொள்ளையடிக்கப்பட்டு, போலீஸார் தம்பியை கைது செய்து, தான் நிராதரவாய் தன்னந்தனியே வீட்டில் படுத்திருப்பதைப் போன்றதொரு உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

ஜனங்கள் மீது போலீஸ் ஏன் அக்ரமம் செய்கின்றது! இதன் முடிவு என்ன? ராமு செய்த குற்றமென்ன? ஊர்வலத்தையும் நடத்தவில்லை. கோஷங்களையும் கோஷிக்கவில்லை. 'இந்தியாவை விட்டு வெளியேறு' தீர்மானத்துக்கும் அவனுக்கும் என்ன சம்மந்தம்? கிளர்ச்சிசெய்யும் ஜனங்களையோ போலீஸ் பிடிப்பதில்லை. ராமுவைப் போன்ற அப்பாவிகளை போலீஸ்காரர்கள் எதற்காக தேடவேண்டும்?

ஷம்ஸு படுக்கையின் புரண்டு கொண்டிருந்தான். யாரோ மெதுவாக 'பீர்பக்ஷ்' என்று கூப்பிடும் சப்தம் அவன் காதுகளில் விழுந்தது. விளக்கை எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

அப்படியே ராமுவைக் கட்டித் தழுவிக்கொள்ள வேண்டுமென்று ஷம்ஸுவுக்கு தோன்றிற்று. யாராவது பின் தொடர்ந்து வந்திருக்கலாம் என்ற பயம் ஒரு பக்கம். 'ராமு சீக்கிரமாக உள்ளே வந்து விடு. யாராவது உன்னைப் பார்த்துக் கொள்வார்கள்."

வீட்டுக்குள் நுழைந்த ராமு புன் சிரிப்புடன் நாற்காலியில் உட்கார்ந்து சுற்று முற்றும் பார்த்தான். "வீட்டில் யாரும் இல்லைபோலிருக்கிறதே. எல்லோரும் எங்கே?"

"நஸ்ரூவை அழைத்துக்கொண்டு அவனுடைய தாய் உன்னுடைய வீட்டுக்குப்போயிருக்கிறாள். பீர்பக்ஷும் அங்குதான் இருக்கிறான். இன்று வீட்டில் நான் மட்டும் தனியாக இருக்கிறேன்."

"ஏன்? என்ன விஷயம்?"

"உனக்குத் தெரியாதா? போலீஸார் உன் வீட்டை சோதனை போட்டு சாமான்களையெல்லாம் ஜப்தி செய்து உன்னுடைய தம்பியை கைது செய்து கொண்டுபோய் விட்டனர்."

பிறகு ஷம்ஸு நடந்ததையெல்லாம் சொன்னான் ராமுவுக்கு ஒன்றுமே தெரியாது. போலீஸாரிடமிருந்து தப்புவதற்கு சுற்றுப்புற கிராமங்களில் தலைமறைவாய் இருந்து திரும்பி வந்தவனுக்கு இங்கு நடந்த சம்பவங்கள் எப்படி தெரிந்திருக்கமுடியும்!

"நான் சாகவேண்டியதுதான் போலிருக்கிறது. என்னிடத்திலும் பணமில்லை. வீட்டிலும் பணமில்லை.

"வீட்டைபற்றிய கவலை உனக்கு வேண்டாம் உன்னுடைய வீட்டை என்னுடை வீடாகவே பாவிப்பேன். உன்னுடைய தம்பியை விடுவிப்பதற்காக ஆகவேண்டியதை செய்வேன். நீ கல்கத்தாவுக்கு போய்விடு பெரிய பட்டணத்தில் பிடிபடமாட்டாய் ஏதோ இரண்டு காசும் சம்பாதிக்க முடியும்.கிராமங்களில் அதிகநாள் தலைமறைவாய் இருப்பது சாத்தியமில்லை. 'இதோ இந்த ரூபாயை வைத்துக் கொள் சமயத்தில் உதவும். கல்கத்தா சேர்ந்து கடிதம் எழுது. அலிகான் என்று பெயரை மாற்றிக்கொள். தெரிந்ததா? கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில்லை. இந்த யுத்தகாலத்தில் கடவுள் உதவியால் என்னிடம் பணத்துக்கு ஒன்றும் குறைவில்லை. என் வீட்டுக்கு பிரயோஜனப் படுவதைப்போல் உன் வீட்டுக்கும் பிரயோஜனப்படும்."

ராமு பல விஷயங்களை எண்ணிக்கொண்டு வந்திருந்தான். ஷம்ஸு காட்டிய அன்பில் எல்லாம் மறந்துபோய்விட்டது.

"நான் உயிருடன் இருக்கும் வரை நீ செய்த உபகாரத்தை மறக்கமாட்டேன்."

"உபகாரம் அல்ல கடமை; நீ என்னுடைய சகோதரன். என்னிடம் தற்சமயம் பணம் இருக்

கின்றது. என்னால் ஆனதை செய்ய நான் கடமைப் பட்டிருக்கிறேன்."

ஆறுமாதங்கள் கழிந்தன. "போலீஸார் நீண்ட நாட்களாக தேடிவந்த ராம் பாபு கைது செய்யப்பட்டார். அலிகான் என்ற மாறு பெயருடன் கல்கத்தாவின் ஒரு ஹோட்டலில் தலை மறைவாய் இருந்துவந்தார்" என்று ஷம்ஸு பத்திரிகையில் பார்த்தான்.

மாதங்கள் உருண்டோடின. விடுதலையடைந்து ஊருக்குத்திரும்பி வேரொரு கம்பெனியில் ராமு வேலைக்கு அமர்ந்தான். அத்துடன் பழைய கதையும் ஆரம்பமாயிற்று. காலை 8-மணிக்கு அவனும் வீட்டை விட்டு புறப்படுவான். ஷம்ஸுவும் கடைக்குக் கிளம்புவான். ஹிந்துஸ்தான், பாகிஸ்தான், மோதல் ஆரம்பிக்கும். கார சாரமான வாக்குவாதம் நடக்கும்.

"பாகிஸ்தான் கோரிக்கை குறுகிய மனப்பான்மையின் உற்பத்தி. ஹிந்து முஸ்லிம்கள் சகோதரர்களாக வாழ்ந்து வருகின்றனர். சகோதரர்களாகவே கூடி வாழப்போகின்றனர். இன்னிலையில் பிரிவினையின் அவசியமென்ன?"

"ஹிந்து முஸ்லிம்கள் சகோதரர்கள் என்பது வாஸ்தவந்தான். ஆயினும் மனக்கசப்பு ஏற்பட்டு விட்ட பிறகு பாகத்தைப் பிரித்துக்கொள்வதில் நஷ்டமென்ன?"

"மனக்கசப்பு ஏற்பட்டு விட்டதென்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. வெளியாரைப் பற்றி ஏன் பேசவேண்டும். உன்னையும் என்னையும் பார்த்தாலே போதும். எனக்கு வேண்டிய எத்தனையோ ஹிந்துக்கள் இருக்கத்தான் செய்கின்றனர். இருந்தும் கஷ்ட காலத்தில் நீ தான் உதவி செய்ய முன் வந்தாய்"

"நீ ஒரு காங்கிரஸ் வாதி, நான் முஸ்லிம் லீகர். நமக்கிடையே பிளவு ஏற்பட்டுவிட்டது. அது இருந்தேவரும். மனக்கசப்பு இல்லையென்று வாயளவில் வேண்டுமானால் சொல்லிக்கொண்டிருக்கலாம்."

வாக்குவாதம் வளர்ந்துகொண்டே போகும். ஆனால் முடிவுதான் ஏற்படுவதில்லை. இப்படியே நாட்கள் சென்றுகொண்டிருந்தன.

16 ஆகஸ்ட், 1946-ல் முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கைதினம் கொண்டாடப்பட்டது. கல்கத்தாவில் ஆரம்பித்த கலவரங்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் பரவின............

அக்டோபர் மாதம் தஸரா விடுமுறைக்குப்பிறகு ராமு அன்றுதான் ஆபீஸுக்கு வந்திருந்தான். வேலை அதிகமாய் இருந்தது. மத்தியானம் மூன்றுமணிக்கு அவனுடைய ஆபீஸுக்கு எதிரிலுள்ள மஹல்லாவில் கலகம் மூண்டது. ராமு ஆபீஸை விட்டுப்புறப்பட்டு வீட்டை நோக்கி ஓடினான். அவசர அவசரமாக கடைகள் மூடப்பட்டன. தடிகளையும் கட்டாரிகளையும் கொண்ட கூட்டங்கள் இங்கும் அங்கும் காணப்பட்டன. 'ஜெய் ஹிந்த்' 'அல்லாஹு அக்பர்' கோஷங்கள் காதுகளைத் துளைத்தன.

என்ன செய்கின்றனர்? ஏன் செய்கின்றனர்? அதன் விளைவு என்ன? என்பது நிதானமிழந்துவிட்ட ஜனங்களுக்குத் தெரியாது. வழியில் ஒரு முஸ்லிம் இறந்து கிடப்பதை ராமு பார்த்தான். ஷேர்வானி ரத்தத்தில் தோய்ந்து மண்டை பிளந்து அவனுடைய வாய் அகல திறந்திருந்தது. "பைத்தியக்கார ஜனங்களே! என்ன செய்கிறீர்கள்" என்று அந்தப் பிணம் கேட்பதுபோல ராமுவுக்கு பட்டது.

கொஞ்ச தூரத்தில் ஒரு ரிக்ஷா இழுப்பவனுடைய பிணம் ரிக்ஷாமீது குப்புறவிழுந்து கிடந்தது. அவனுடைய வயிற்றில் கட்டாரி சொருகியிருந்தது ரிக்ஷாவெல்லாம் ஒரே ரத்தம். அந்த ஏழைக்கும், பாகிஸ்தானுக்கும் என்ன சம்மந்தம்! முஸ்லிம்களால் அவனுக்கு என்ன நஷ்டம்! வயிற்றுக் கூழுக்கு மாட்டைப்போல் உழைத்து வாழ்நாட்களை ஒவ்வொன்றாய் எண்ணிக்கழித்து வந்த ஏழையின் வயற்றிலே கட்டாரி!

அந்த இடத்தில் யாருமிருக்கவில்லை. வீட்டுக் கதவுகளெல்லாம் மூடப்பட்டிருந்தன. ராமுவுக்கு மயிர்க்கூச்சலெடுத்தது. பின்னாலிருந்து யாராவது வந்து கட்டாரியைச்சொருகினால்! பின்புறம் திரும்பிப் பார்த்தான். யாரும் இல்லை. சற்று தூரத்தில் மேகத்தைப்போல் புகை கிளம்பிக் கொண்டிருப்பதைக்கண்டான். தன்னுடைய தெருவில் வீடுகள் எரிந்து கொண்டிருப்பதை ராமு உணர்ந்தான். அவனுடைய உறுதி தளர்ந்து சரீரம் வியர்த்தது. என்ன செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. திடீரென்று ஒரு கூட்டம் அவன் இருக்கும் திக்கை நோக்கி ஓடி வந்தது. ஹிந்துக்களின் கூட்டம். அவர்களிடம் ராமு விஷயத்தை விஜாரித்தான். முஸ்லிம்களின் முஹல்லாவில் இருக்கும் ஹிந்துக்களை பாதுகாக்க முடியாதென்றும், அங்கு ஏராளமான முஸ்லிம்கள் கூடி வீடுகளுக்கு தீ யிடுகின்றனர் என்றும் ராமுவுக்கு தெரிந்தது.

“ என்னுடையவீடும் அங்குதான் இருக்கின்றது. சகோதரர்களே! என் வீட்டிலுள்ளோரை காப்பாற்றி ரட்சிக்க முன்வாருங்கள்” என்று ராமு கத்தினான்

‘ பைத்தியக்காரனே! முதலில் உன்னுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள் இது ரட்சிப்பதற்கான நேரமல்ல பழிக்குப்பழி வாங்கவேண்டிய கட்டம்” என்று பதில் கிடைத்தது.

சாதுவானாலும் ஜாதி பித்து விடாது என்று சொல்லுவார்களல்லவா? ராமுவும் அந்தக் கூட்டத்துடன் சேர்ந்துகொண்டான். அவனுடைய ரத்தமும் கொதித்தது. கண்கள் சிவந்தன இனி பழிக்குப்பழி வாங்கியே தீருவான்.

வீடு எரிந்து சாம்பலானவுடன் தன் மனைவியையும் முஸ்லிமாக்கி ஷம்ஸு கல்யாணம் செய்துகொண்டான் என்று ராமு கேள்விப்பட்டான்.

“ இரவு வேளை.........என் மனைவியை ஷம்ஷு பெண்டாள முயற்சித்துக்கொண்டிருப்பான்” ராமுவுக்கு பைத்தியமே பிடித்துவிட்டது.

“ எனக்கும் ஒரு கட்டாரியைக் கொடுங்கள் நானும் பழிக்குப்பழி வாங்குவேன்”

பாதி ராத்திரிவேளை முஸ்லிம் வேஷத்திலிருந்த ராமு ஷம்ஸுவின் வீட்டை நோக்கி விரைந்தான். அவனுடைய கையில் கட்டாரி இருந்தது. ஒன்றன்பின் ஒன்றாக கடந்தகால நினைவுகள் மாறி மாறி வந்தன... ......

எனக்கு உதவி செய்வதைப்போல் நடித்து என் மனைவியை அபகரித்த படுபாவி! எவ்வளவு அன்பைக் காட்டினான்! பணத்தை அள்ளிச் செலவுசெய்தான்!......ஒருக்கால் என்னுடைய மனைவியும் அவனுடன்......... இல்லை! அப்படியிருக்க முடியாது... மோசக்காரப்பயல்! ......போய் கதவைத் தட்ட வேண்டும். பீர்பக்ஷ் கதவைத் திறப்பான் ஒரே வெட்டு.........இல்லை, இல்லை. அந்த படுபாவி உஷாராய்விடுவான்........“ பாபு எங்கே!” என்று கேட்பேன். அவன் என்னை அடையாளம் கண்டுகொள்ள மாட்டான். “நீங்கள் யார்” என்று கேட்பான். “ கான்பகதூர் இலாஹிபக்ஷ் வீட்டிலிருந்து வந்திருக்கிறேன். அவரை அவசியமாகப் பார்க்கவேண்டும்” என்பேன். பிறகு கதவு திறக்கப்படும்........ ராமுவின் நரம்புகள் முறுக்கேறின மூளை கொதித்தது. கட்டாறியை இருகப் பிடித்துக்கொண்டு கதவைத் தட்டினான். உள்ளே காலடி சத்தம் கேட்டது. ராமு உற்றுக்கேட்டான். அடிபட்ட பட்சிபோல் அவனுடைய உள்ளம் துடித்துக்கொண்டிருந்தது கால்கள் நடுங்கின. கதவை உடைத்துக்கொண்டு நுழைந்துவிடலாமா என்றுகூட நினைத்தான்......... மெதுவாக கதவு திறந்தது.

“ யார்!” என்று கேட்டான் ஷம்ஸு.

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்துவிட்டான் ராமு விளக்கு எரிந்துகொண்டிருந்தது ராமுவின் தலைமயிர் கலைந்து கண்கள் சிவந்து பைத்தியக்காரனைப்போல் காட்சியளித்தான்.

“ உன்னுடைய துரோகச் செயலுக்கு கூலி கொடுக்க வந்திருக்கிறேன். என்னுடைய மனைவியை கலியாணம் செய்துகொள்ள உனக்கு வெட்கமில்லை?” கையில் கட்டாரி மின்னிக்கொண்டிருந்தது.

முதலில் ஷம்ஸுவுக்கு ஒன்றும்புரியவில்லை ஒரே நிமிஷத்தில் நிலைமை பளிச்சென்று பட்டது. இமைப்பொழுதில் மூலையிலிருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டான். “ கட்டாரியைக் கீழே போடு” நன்றி கெட்டவனே! உன் மானத்தைக் காப்பாற்றினேன். என்னையே கொல்ல கட்டாரியைக் கொண்டுவந்திருக்கிறாய். நான் மட்டிலும் இல்லாமலிருந்திருந்தால் உன் மனைவியை எந்த காலிப்பயல் இழுத்துக்கொண்டு போயிருப்பான் என்று யாருக்குத்தெரியும்.”

“ ஆனால் நீ ....”

“ ஆம்! நான் அவளை பலவந்தமாக முஸ்லிம் ஆக்கினேன். அதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை. இல்லாவிட்டால் பைத்தியக்காரக் கூட்டம் அவளை என்ன செய்திருக்கும் என்று சொல்ல முடியாது. நான் அவளை முஸ்லிமாக்காமல் இருந்திருந்தால் என் மீதும் நம்பிக்கை ஏற்பட்டிருக்க முடியாது”

‘ ஆயினும் நீ அவளை கலியாணம்.........”

கலியாணமா! யார் சொன்னார்கள்? அவளிடமே கேட்டுத் தெரிந்துகொள்”

ஷம்ஸு தன் மனைவியைக் கூப்பிட்டு “ ராமு பாபு வந்திருப்பதாக என் சகோதரியிடம் சொல்லு” என்றான்.

“ இந்த அகால வேளையில் சகோதரியை அனுப்ப முடியாதென்று அவரிடம் சொல்லுங்கள். காலம் கெட்டுப்போயிருக்கிறது. தெருவில் ரத்தவெறியர்கள் திரிந்துகொண்டிருக்கிறார்கள்.”

“ என் சகோதரியை நான் கலியாணம் செய்துகொண்டதாக கேள்விப்பட்டு ராமுவும் ரத்த வெறியில் தான் இங்கு வந்திருக்கிறான்.”

நான் கண்ட காட்சி.

(K. A. M ஷவுகத் அலி, ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர்.)

தேசத்தில் பல கட்சிகள் இருக்கின்றன. தென்னிந்தியாவில் ஈ. வே. ரா பெரியார் தலைமையில் திராவிடக்கழகம் இருந்துவருகிறது. அவர்களைப் பற்றியும் அவர்களுடைய கொள்கையைப்பற்றியும் நமக்குக் கவலையோ பொறுமையோ இல்லை. 7—5—48 மெயிலில் மதுரையிலிருந்து தூத்துக்குடி சென்றேன். தூத்துக்குடியில் 18-வது திராவிடக் கழக மஹாநாடு நடக்கவிருந்தது கருப்புச் சட்டைக்காரர்கள் ஏராளமாய் ரயிலில் இருந்தனர்.

ரயில் ஒவ்வொரு ஸ்டேஷனை அணுகும்போதும் 'மதம் என்பது மடமை' 'மதம் ஒழிக' என்று கோஷங்கள் கிளம்பிக்கொண்டிருந்தன. லீகர்களும் சேர்ந்து இவ்விதம் கோஷித்ததுதான் அதிலுள்ள குறிப்பிடத்தக்க விஷயம்.

நான் கண்ட காட்சி

தூத்துக்குடியில் நடந்த கருப்புச்சட்டை ஊர்வலத்தில் கருப்புச்சட்டை அணிந்திருந்த அரையடி நீள தாடியுள்ள முஸ்லிம்களும் துருக்கி தொப்பிக்காரர்களும் காட்சியளித்தனர். முஸ்லிம் லீக்கின் பிரசாரத்தால் ஏற்பட்ட முஸ்லிம்களின் அலங்கோலத்தைக் கண்ட பிறகு இஸ்லாத்தைக் காப்பாற்றும்படி மனவேதனையுடன் பிரார்த்திக்காமல் இருக்கமுடியவில்லை.

முஸ்லிம் சகோதரர்களே! மதம் போச்சு! மசூதி போச்சு! இஸ்லாமுக்கு ஆபத்து! ஹிந்துக்களுடன் சேர்ந்து வாழ முடியாது. நம் கலாச்சாரம் வேறு. மதம் வேறு. நமக்குத் தனி தாயகம் வேண்டும் என்று பதவி மோகக்கார லீக் தலைவர்கள் பாமர முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காக செய்த பிரசாரத்தின் விளைவு தெரிந்ததா!

இஸ்லாம், இஸ்லாமென்று கூச்சலிட்டதென்ன! 'மதம் என்பது மடமை' என்று கூச்சலிடுவதென்ன! அறியாமையல்லவா?

காங்கிரஸ் பிடிக்கவில்லை என்பதற்காக தற்கொலை புரிந்துகொள்வதா? லீக்கை இஸ்லாம் என்று பிரசாரம் செய்த அரை குறை ஆலிம்கள் எங்கே? தூங்குகிறார்களா? மயக்கம் இன்னும் தெளியவில்லையா?

தேசத்தொண்டு செய்ய தேசீய காங்கிரஸில் சேர்ந்த என்போன்றவர்களை காபிர்கள் என்றும் மசூதியில் நுழையக்கூடாதென்றும் நம் உறவினர்களுக்கும் கபரஸ்தானில் இடமில்லையென்றும் சேர்ந்து சாப்பிடக்கூடாதென்றும் பத்வாக்கள் கொடுத்தவர்கள் 'மதம் என்பது மடமை' என்று கூச்சலிடும் லீகர்களைக் குறித்து என்ன சொல்லுகின்றனர்?

அதைக் குறித்து தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பை பொதுமக்களிடமே ஒப்படைக்கிறேன். இவ்வித வழி கேட்டினின்றும் ஆண்டவன் நம் அனைவரையும் காப்பாற்றுவாராக!

ஷம்ஸு சிரித்தான் அறைக்குள் இரண்டு பெண்கள் சிரிப்பது கேட்டது ராமுவும் ஷம்ஸுவும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்து விட்டனர். சிரிப்பின் நிலவு உள்ளங்களிலிருந்த இருளை போக்கி விட்டது.

"அடுத்த உத்திரவுக்காக காத்திருக்கிறோம்" என்றான் ஷம்ஸு.

"இந்த வேளையில் வெளியே போகவேண்டாம் என்று அவருக்கு சொல்லுங்கள். பக்கத்து அறையில் அவர்களுடைய படுக்கைக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றாள் அவன் மனைவி.

"ராமு பாபு! நீங்கள் பக்கத்து அறையில் போய் படுத்துக்கொள்ளுங்கள். நான் சகோதரியை அனுப்புகிறேன்" என்றாள் ஷம்ஸுவின் மனைவி.

"கல்யாணம் செய்திருப்பவன் நானல்லவா!" என்றான் ஷம்ஸு குறும்பாக.

"போதும் குறும்புத்தனம். முதலில் உங்கள் லட்சணத்தை கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்களேன்!"

இரவு பாதிக்கு மேல் கழிந்திருந்தது. எங்கும் மரணத்தின் நிசப்தம் நிலவிற்று போலீஸ் லாரிகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. நடக்க வேண்டியதெல்லாம் நடந்தேறிய பிறகு போலீஸார் விழித்துக் கொள்ளாமலில்லை.

கலவரம் நடந்து நாட்கள் சென்று விட்டன ராமு தன் மனைவியுடன் வாடகை வீட்டில் குடியிருந்தான். காலை எட்டுமணியானவுடன் ராமுவும் புறப்படுவான். ஷம்ஸுவும் கிளம்புவான். அதே ஹிந்துஸ்தான் பாகிஸ்தான் சர்ச்சை. காரசாரமான விவாதந்தான். இரவு எட்டு மணி அடித்தவுடன் ராமு வந்து சேருவான். ஷம்ஸுவும் ஹுக்காவுடன் திண்ணையில் வந்து உட்காருவான். சதுரங்க ஆட்டம் ஆரம்பித்து ஹிந்துஸ்தான் பாகிஸ்தான் மோதலில் முடிவடையும். மனவேதனையுடன் இருவரும் பிரிந்து செல்வர். மறுநாள் காலை எட்டு மணிக்கு இருவரும் சேர்ந்திருப்பதைக் பார்க்கலாம்.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.